DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW6 | Caste | : | |
| Name | : | ராஜ்குமார் | Age | : | 54 |
| F/N | : | முருகேசன் | Occupation | : | தலைமை எழுத்தர், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2, இராமநாதபுரம் |
| Village | : | காட்டுப்பிள்ளையார் கோவில் தெரு | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 17-th day of November 2022.

**17.11.2022.**

**முதல் விசாரணை**

**1.** நான் இராமநாதபுரம் மாவட்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து கொண்டு காட்டுப்பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 யை தெரியும். கடந்த 30.06.2011 முதல் 06.07.2012 வரை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2ல் உதவியாளராக பணிபுரிந்தேன். 06.07.2012 பிற்பகல் முதல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியாற்றினேன். நான் பணியில் இருந்த போது நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் நடுவராக திரு. பாஸ்கரன் அவர்கள் பணியாற்றினார். நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் கூடுதல் பொறுப்பில் இருந்தார்.

**2.** அவருக்குப் பிறகு 04.05.2012 முதல் 17.07.2012 வரை பரமக்குடி நீதித்துறை நடுவர் ரேவதி அவர்கள் நீதித்துறை நடுவர் எண். 1 மற்றும் 2 நீதிமன்றங்களில் கூடுதல் பொறுப்பு வகித்தார். நான் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் நான் பணியில் இருந்த போது பிறப்பு, இறப்பு சான்றுகள் சம்பந்தப்பட்ட மனுக்களில் நீதித்துறை நடுவர் அவர்களின் கையெழுத்தை போலியாக செய்ததாக கேள்விப்பட்டேன். அந்த சமயம் எனக்கு குறிப்பாணை கொடுத்திருந்தார்கள். குறிப்பாணையில் போலி கையெழுத்திட்டது சம்பந்தமாக என்னையும் சேர்த்து 7 நபர்கள் மீது விசாரணைக்காக குற்றச்சாட்டு வனையப்பட்டது. இறுதியாக இந்த வழக்கில் எதிரிகளான ரவிச்சந்திரன், மனோகரன் ஆகியோர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** என்னையும் சேர்த்து 7 நபர்கள் மீது துறைவாரியான விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களை குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த விசாரணையில் மனோகரன் மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பிய கடிதத்தை சான்றாவணம் 32 ஆக குறியீடு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த விசாரணையில் பிழையாளி மனோகரன் மாண்புமிகு நீதியரசருக்கு நீதித்துறை நடுவர் கையொப்பம் செய்யாததால் பொதுமக்களின் நலன் கருதி அவர் தான் போட்டதாக ஒப்புக்கொண்டார் என்றால் சரிதான். பிழையாளி மனோகரன் தனியாக பராமரித்து வந்த despatch register சான்றாவணம் ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

**2.** நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் despatch clerk ஆக திரு. சிவானந்தம் பணியாற்றினார் என்றால் சரிதான். மேற்படி சிவானந்தம் அவர்களை நீதித்துறை நடுவர் எண். 1 நீதிபதி பிறப்பு, இறப்பு சான்றிதழ்களில் முறைகேடு செய்ததற்காக தற்காலிக பணி நீக்கம் செய்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் புகாருக்கு பின் காவல் துறையினர் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்திற்கு வந்து பிறப்பு, இறப்பு உத்தரவு சம்பந்தமான ஆவணங்களை பார்வையிட்டார்களா என்றால் இல்லை. நான் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் பணியில் இருந்த காலத்தில் திரு. சிவானந்தம் மீது குவிமுச பிரிவு 317 மனுவிற்கு கொடுக்கப்படும் Cr.m.P. எண் குறித்து குறிப்பாணை ஏதேனும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை.

**3.** போலீசார் விசாரணையில் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1ல் நடைபெற்ற பிறப்பு, இறப்பு மனுக்கள் சம்பந்தமான முறைகேடுகள் குறித்து எந்தவொரு கேள்வியும் என்னிடம் கேட்கப்படவில்லை என்றால் சரிதான். துறைவாரியான நடவடிக்கையில் என்னை தவிர மற்ற 6 பிழையாளிகள் மீது proved என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் தற்போது முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தையே தான் சொன்னேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

(ஒப்பம்/-க. பிரபாகரன்)
நீதித்துறை நடுவர் எண். 2
இராமநாதபுரம்

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW5 | Caste | : | |
| Name | : | சுந்தரபெருமாள் | Age | : | 69 |
| F/N | : | குப்புசாமி | Occupation | : | பதிவுறு எழுத்தர், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2, இராமநாதபுரம்(ஓய்வு) |
| Village | : | வடக்குத்தெரு | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 17-th day of November 2022.

**<u>17.11.2022.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் இராமநாதபுரம் மாவட்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் பதிவுறு எழுத்தராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது வடக்குத்தெருவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 யை தெரியும். கடந்த 05.01.2012 முதல் 31.07.2012 வரை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் பதிவுறு எழுத்தராக பணிபுரிந்து ஓய்வுபெற்றேன். அப்போது திறந்த வெளி நீதிமன்றத்தில் பிறப்பு, இறப்பு சம்பந்தமான மனுக்கள் பதிவு செய்யப்படும். அந்த மனுக்களில் நடுவரின் கையொப்பம் பெற்று MC என்னிடம் கொடுப்பார். அதை பதிவேடு எண். 12–ல் பதிவு செய்துவிட்டு மீண்டும் MC யிடம் கொடுத்துவிடுவேன். பின்னர் அவர் அடுத்த வாய்தா தேதி அன்று எடுத்து சரிபார்த்து நீதிபதி அவர்களிடம் கையெழுத்து பெற்று என்னிடம் Cr.M.P எண் கொடுப்பதற்காக என்னிடம் கொடுப்பார். நான் Cr.M.P. எண் பதிவு செய்துவிட்டு மீண்டும் மனுக்களை MC யிடம் கொடுத்து விடுவேன்.

**2.** அதன்பிறகு MC வாய்தா தேதி போடுவார். மீண்டும் அதை என்னிடம் கொடுப்பார்கள். அதன்பேரில் எதிர்மனுதாரர்களுக்கு நான் அறிவிப்பு அனுப்பிவிட்டு மீண்டும் MC யிடம் மனுக்களை கொடுத்துவிடுவேன். கடந்த 18.07.2012–ம் தேதி முதல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தின் நீதிபதி நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தின் முழு பொறுப்பில் இருந்தார். அவர்கள் பொறுப்பில் இருந்த போது பிறப்பு, இறப்பு மனுக்கள் மீது விசாரணை செய்தார்கள். பின்னர் விசாரணை செய்த deposition னலிலும், பதிவேடு எண். 22 லும், சாட்சிகளிடமும் கையெழுத்து பெறுவேன். கையெழுத்து பெற்ற பின்

மனுக்களை diary போடுவதற்காக MC யிடம் கொடுத்துவிடுவேன். பிறகு மாலை நேரத்தில் நீதிபதியிடம் மேற்சொன்னவற்றில் கையொப்பம் பெற நானும், MC யும் நீதிபதி அறைக்கு சென்றோம். அன்று நடுவரிடம் கையொப்பம் பெற முடியவில்லை. இவ்வாறு 2, 3 நாட்களுக்கு கையொப்பம் பெற முடியவில்லை. பின்னர் ஒரு நாள் நீதிபதி அவர்கள் பாதி ஆவணங்களில் மட்டும் கையொப்பம் செய்தார்கள். மீதமுள்ளவற்றிற்கு மறுநாள் வர சொன்னார்கள்.

3. மறுநாள் சென்றும் கையெழுத்து பெற முடியவில்லை. 31.07.2012 ல் நான் ஓய்வு பெறும் வரை நடுவரிடம் கையெழுத்து வாங்க முடியவில்லை. மீதமுள்ள deposition, வழக்கு கோப்புகள், மற்றும் பதிவேடு எண். 22 ஆகியவற்றை MC யிடம் ஒப்படைத்து விட்டு நான் பணி ஓய்வில் சென்றுவிட்டேன். நான் ஓய்வு பெற்று 9 மாதங்களுக்கு பிறகு நீதிபதி அவர்கள் எனக்கு குறிப்பாணை கொடுத்தார்கள். அதில் deposition மற்றும் பதிவேடு எண். 22 ஆகியவற்றில் ஏன் கையெழுத்து பெறவில்லை என்று கேட்டிருந்தார்கள்.

4. மேலும் பிறப்பு, இறப்பு மனுக்கள் மீது தவறு நடந்திருப்பதை பற்றி எனக்கு தெரியுமா என்று கேட்டிருந்தார்கள். நான் பணி ஓய்வு பெற்ற பின் நடந்த விவரங்கள் என்பதால் நான் எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டேன். நான் பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டபடியால் யார் மீது நடவடிக்கை எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நீதிமன்றத்தில் துறைவாரியான நடவடிக்கை இந்த சம்பவம் குறித்து நடைபெற்றது என்றால் சரிதான். 7 நபர்கள் மீது நடந்தது. அந்த நடவடிக்கையில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் ஒரு நாளைக்கு 30 பிறப்பு, இறப்பு மனுக்கள் வரும் என்றால் ஒரு 20 மனுக்கள் வரும். அந்த 20 மனுக்கள் குறித்து எடுக்கப்படும் deposition ன் களிலும், பதிவேடு எண். 22 லும் அன்றைய தினமே நடுவரிடம் கையொப்பம் பெற வேண்டும் என்றால் சரிதான். அந்த deposition மற்றும் பதிவேடு எண். 22 ல் கையொப்பம் பெற்ற பின்பு தான் உத்தரவை தயார் செய்ய தட்டச்சருக்கு கட்டுகள் அனுப்பப்படும் என்றால் சரிதான். நான் பணியில் இருந்த போது மனோகரன் என்பவர் தான் தட்டச்சராக பணியில் இருந்தார் என்றாலும், அவரிடம் தான் கட்டுக்கள் தட்டச்சு செய்ய அனுப்பப்படும் என்றாலும் சரிதான். அவர் உத்தரவை தயார் செய்து நீதிபதியிடம் கையொப்பம் பெறுவார் என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை – இல்லை**</u>

(ஒப்பம்/-க. பிரபாகரன்)
நீதித்துறை நடுவர் எண். 2
இராமநாதபுரம்